**தலைப்பு 205 – பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 205 – பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியான முறையில் தயாரிக்கப்பட்டிருக்காமை. | 2.2.1 |
| | | 2. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை. | 2.7 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | 1. வருடாந்த பொருள் மெய்மையாய்வில் குறைபாடுகள்<br>2. சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.2(ஆ)<br>2.2 |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், வினைத்திறமை, முறைசார் விதமாக மற்றும் நேர்மைத் தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக போதிய கவனத்துடனும் தனது திணைக்களத்தின் அலுவல்கள் மேற்கொள்வதெனவும் (இங்கு சிக்கனம் என்பதால் கருதப்படுவது மதிப்பீடு செய்யப் பட்ட செலவினத்தை மேற்கொள் வதல்ல, செலவிடப்பட்ட பணபத்தின் மூலம் அரசிற்கு உயர்ந்த பெறுமதி கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்துதல்) | 1. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்<br>2. முகாமைத்துவ குறைபாடுகள் | 2.3<br>2.5 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதியில் 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய 11 முக்கிய கருமங்கள் காணப்பட்டதுடன், எதிர்பார்த்த விளைவுகளை பெறுவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்கத்திற்கு சாட்டப்பட்டுள்ள மரணச் சொத்துக்கள் மற்றும் நிறுவப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்புக்கள் தொடர்பாக 1918

இன் 04 ஆம் இலக்கம் மற்றும் 01 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1917 இன் 09 ஆம் இலக்க நம்பிக்கை பொறுப்புச் சட்டத்தின் மூலம் 1931 இன் 11 ஆம் இலக்கம் 1938 இன் 59 ஆம் இலக்கம் மற்றும் 1983 இன் 41 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1922 இன் 01 ஆம் இலக்க பொது நம்பிக்கை பொறுப்பு கட்டளை சட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்டிருந்த மூலதன வருமானம், முதலீட்டு வருமானம், வருமான கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் ரூபா 11,209,507 தொகை 2017 ஆண்டின் போது திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் இந்த வருமானம் சேகரித்தல் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு உட்படுத்தியிருக்கவில்லை.

(ii) பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு பல்வேறு மரணச் சொத்துக்களின் கீழ் பொருண்மையான 12 விவசாய காணிகளை ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை முறைப் பிரகாரம் முகாமைத்துவம் செய்து அவற்றின் வருமானத்தில் இருந்து நிறைவேற்றல் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ள என்.டி.எஸ். சில்வா மரணச் சொத்திற்காக உரிய வனஸ்கல்லவத்த மற்றும் லபுஹேனவத்த ஆகிய காணிகள் தொடர்பாக எதிர்பார்த்த வருமானம் மற்றும் செலவுகள் மதிப்பிடப்பட்டு 2017 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை. வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வலஸ்கல்ல தோட்டத்தில் இருந்து ரூபா 23,294 இற்கான இலாபமும் மற்றும் லபுஹேன தோட்டத்தில் இருந்து ரூபா 232,915 இற்கான நட்டமொன்றினை அடைந்திருந்தது.

## 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

### (அ) சொத்துக்கள் ஆவணப்படுத்துதல்

2017 ஜூன் 28 திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் உள்ள கொம்ப்டோலர் ஜனரால் அலுவலகத்தினால் அழைத்திருந்த பொறியும் பொறித்தொகுதிகள், இயந்திர உபகரணங்கள் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் தொடர்பாக தகவல்களை வழங்கியிருக்கவில்லை.

### (ஆ) வருடாந்த பண்டக் கணிப்பீடு நடாத்துதல்

2016 மார்ச் 31 திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் 2017 வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை சுற்றறிக்கையின் 3.2.6 பந்தியின் பிரகாரம் 2018 ஜூன் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், திணைக்களத்தினால் அவ் அறிக்கை 2018 ஆகஸ்ட் 30 திகதி அளவிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. திணைக்களத்தினால் நிருவகிக்கும் 12 தோட்டங்கள் தொடர்பாக பண்டக் கணப்பீட்டு மேற்கொள்ளப்படாமை இதற்குக் காரணமாகும்.

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் அணுகியிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையான தன்மை இன்றி காணப்பட்டது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 2.3.1 ஸந்தஹிரு ஸேய நம்பிக்கை பொறுப்பு

---

கொழும்பு 03 பாலதக்ஷ மாவத்த 5/15 ஆம் இலக்கத்தில் படைகளின் கூட்டிணைப்பு உத்தியோகத்தர் நிறுவி எனவும் பாதுகாப்பு நம்பிக்கை பொறுப்பாளர் எனவும் பொரு நம்பிக்கை பொறுப்பாளர் நியமனம் செய்து 2011 ஜனவரி 14 திகதி பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்திற்கு ''ஸந்தஹிரு ஸேய'' நம்பிக்கை பொறுப்பு ஆரம்பிப்பதற்காக விண்ணப்பம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பயங்கரவாதத்தை வேரோடு அகற்றி பெற்றிருந்த மக்கள் வெற்றியினை நினைவுபடுத்துவதன் நோக்குடன் முப்படைகளின் முழுமையான பங்களிப்பினை பெற்றுக் கொண்டு மாகாணம் சார் நிர்மாணிக்கப்படும் 9 தூபிகளுக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது தூபி ஆக ''ஸந்தஹிரு ஸேய'' நிர்மாணிப்பதற்காக உதவிகள் பெற்றுக்கொள்ளல் இந்த நம்பிக்கை பொறுப்பினை நிறுவியதன் குறிக்கோளாக இருந்தது. நம்பிக்கை பொறுப்புக்காக 4 பேர்களைக் கொண்ட நிருவாக நம்பிக்கை பொறுப்புச் சபை ஒன்று நியமனம் செய்யப்பட்டது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஐக்கிய செய்தித்தாள் கம்பனியினால் 02 சந்தர்ப்பங்களில் ரூபா 3 மில்லியன் மற்றும் ரூபா ஒரு மில்லியன் வீதம் மொத்தம் ரூபா 4 மில்லியன் நன்கொடை வழங்கியிருந்தது. அவற்றில் ரூபா 3 மில்லியன் தொகை நம்பிக்கை பொறுப்பு உறுதி கையொப்பமிடப்பட்டு சட்டரீதியாக நம்பிக்கை பொறுப்பு நிறுவுவதற்கு 01 மாதம் 13 நாட்களுக்கு முன்னர் அதாவது 2010 நவம்பர் 29 திகதி இந்த நம்பிக்கை பொறுப்பின் பேருக்கு கிடைத்திருந்தது.

(ஆ) நம்பிக்கை பொறுப்பு உறுதியினை கையொப்பமிட்டு உடன்படிக்கைக்கு அணுகுவதற்கு முன்னர் அதாவது 2010 திசெம்பர் 16 திகதி ரூபா 3 மில்லியன் தொகையொன்று திணைக்களத்தின் அலுவலக வங்கிக் கணக்கில் இருந்தும் ரூபா 2.72 மில்லியன் தொகை ஒன்று இதனோடு தொடர்பு இல்லாத மதம்சார் மற்றும் சமூகசேவை பொது நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்தும் ''ஸந்தஹிரு ஸேய'' நிர்மாண வேலைக்காக எனக் குறிப்பிட்டு தனியார் கம்பனி ஒன்றிற்கு, பிக்கு ஒருவருக்கு மற்றும் படை உத்தியோகத்தர்கள் இருவரின் தனிப்பட்ட பேரில் விடுவிக்கப்பட்டிருந்தது.

(இ) நம்பிக்கை பொறுப்பு உறுதியின் விரிவு பிரிவு 9 ஆம் பந்தி(அ) இன் பிரகாரம் நிறுவி உட்பட நிருவாக நம்பிக்கை பொறுப்புச் சபை அங்கத்தவர்களின் குறைந்த பட்சம் இரண்டு பேரின் கையொப்பத்தடன் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூலம் விண்ணப்பித்தலின் பேரில் இந்தப் பணம் பேர் குறிப்பிடப்படும் நபர் ஒருவர் அல்லது நிறுவனம் ஒன்றின் பேரில் எழுதப்பட்ட காசோலை ஒன்றின் மூலம் விடுவிக்கப்பட வேண்டும். நம்பிக்கை பொறப்பு உறுதியின் 9 ஆம் பிரிவின் (அ) பந்திக்கு முரணாக எழுத்துமூல கோரிக்கை இன்றி பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தினால் மேற்கூறிய (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையும் உட்பட 08 சந்தர்ப்பங்களில் ரூபா 7.18 மில்லியன் தொகை ஒன்று (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தரப்பினர் மற்றும் மேலும் தரைப்படை மேஜர் ஒருவருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. இவ் விதமாக நன்கொடைகள் மற்றும் ஏனைய நம்பிக்கை பொறுப்பு மரணச் சொத்துக்களுக்கு சொந்தமான பணம் பயன்படுத்தப்பட்டு பல்வேறு தரப்பினருக்கு செலுத்தப்பட்ட பணம் தொடர்பான செயலாற்றுகை தொடர் செயல் நடவடிக்கை எடுக்காததுடன் செலவுகளுக்கு உரிய முன்னேற்ற அறிக்கைளும் பெற்றிருக்கவில்லை.

(ஈ) 2011 பெப்ரவரி மாதம் 01 திகதியில் காணி மறுசீரமைப்பு ஆணைகளுக்கு சொந்தமான காணி ஒன்று இலங்கை பொது நம்பிக்கை பொறுப்பாளரினால், ஸந்தஹிரு ஸேய கட்டுவதற்காக ஏற்றுக்கொண்டிருந்தது. எனினும் இந்த காணியில் எதுவித நிர்மாணவேலைகள் அல்லது அபிவிருத்தி அலுவல்கள் நடைபெற்றிருக்காமையினால் மீண்டும் 2015 மார்ச 17 திகதி அந்த காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால்

உரித்தாக்கியிருந்தது. இதன்படி சட்டரீதியாக உரிமையில்லாத காணி ஒன்றில் ''ஸந்தஹிரு ஸேய'' நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(உ) நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பணம் காணப்படாத போதிலும் திணைக்களத்தினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ''ஸந்தஹிரு ஸேய'' நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் ரூபா 514,432 இற்கான வரவு (மறை) மீதியொன்று ஏற்பட்டிருந்தது.

**2.3.2 நிஹால் பீரிஸ் மரணச் சொத்து**

இரத்மலான, இரண்டாம் ஒழுங்கையில் 57 ஆம் இலக்க இடத்தில் வசித்துவந்துள்ள நிஹால் பீரிஸ் என்பவரின் மரண சாசனம் இல்லாத மரணச் சொத்திறகாக கல்கிஸ்ஸ மாவட்ட நீதிமன்றத்தினால் 2007 அக்தோபர் 02 ஆம் திகதிய 2117/15/டீ இலக்கங் கொண்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு நிஹால் பீரிஸ் மரணச்சொத்து தொடர்பான புரோபேட் அதிகாரம் கிடைத்திருந்தது.

இந்த ஆதனங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இரத்மலான 2 ஆம் ஒழுக்கையில் 57 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள வீடு**

2007 திசெம்பர் 06 ஆம் திகதிய பொது நம்பிக்கை பொறுப்பாளரினால் இந்த வீடு சிறிய திருத்த வேலைகள் மேற்கொண்டு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு கொடுத்து வருமானம் ஒன்று பெற முடியுமெனவும் அந்த வருமானத்தை திரு. நிஹால் பீரிஸ் அவர்களின் மந்த உளம்சார்ந்த நிலைமையில் காணப்படும் இரண்டு பிள்ளைகளினதும் நலனுக்காக பயன்படுத்த முடியும் எனவும் கல்கிஸ்ஸ மாவட்ட நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் குறிப்பிட்ட ஆதனங்கள் தொடர்பாக உரிமைத்தத்துவம் சார் அதிகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், அந்த ஆதனங்களை பராமரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்காமையால் 2017 ஆகஸ்ட் மாதம் அதாவது கணக்காய்வுத் திகதி வரை அந்த வீட்டை பழுதுபார்த்து வாடகைக்கு அல்லது குத்தகைக்கு கொடுப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த 10 வருடங்களுக்கான வருமானத்தை இழந்துள்ளது.

**(ஆ) 20 பர்சஸ் கொண்ட கந்தவலவத்த காணி (37 ஆம் இலக்கத் துண்டு)**

மரணச் சொத்தை சேர்ந்த கந்தவல வத்தை காணி திணைக்களத்தினால் 5 பர்சஸ்கள் மற்றும் 15 பர்சஸ்கள் ஆக முறையே 37B மற்றும் 37A ஆக பிரித்து 4245 ஆம் இலக்க நில அளவை வரைபு தயாரிக்கப்பட்டிருந்தது. 15 பர்சஸ் காணி பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்தினால் ரூபா 9,000,000 இற்கான பெறுமதி மதிப்பீடு செய்திருந்ததுடன் பகிரங்க செய்தித்தாள் அறிவித்தலின் மூலம் இந்த காணியை ரூபா 8,775,000 தொகைக்கு விற்கப்பட்டிருந்தது. அது அரசாங்க குறைந்த பெறுமதி மதிப்பீட்டுத் தொகையை விட ரூபா 225,000 தொகை குறைவான பெறுமதியினைக் கொண்டிருந்தது. மேலும் மீதியாக இருக்க வேண்டிய 5 பர்சஸ் காணி தொடர்பாக தகவல்களும் குறிப்பிட்ட கோவையில் காணப்படவில்லை.

**(இ) கொட்டாஞ்சேனை, வாசல வீதி வீதவரி இலக்கம் 65118 கொண்ட 1.99 பர்சஸ் ஆதனம்**

2010 மே 25 திகதியில் உள்ளவாறு இந்த காணி ரூபா 1,800,000 தொகைக்கான பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆதனத்தை வீட்டில் குடியிருப்பவருக்கே ரூபா 3,000,000 தொகைக்கு விற்பனை செய்வதற்காக திணைக்களம் தீர்மானித்திருந்தது. 2010 நவம்பர் 19 திகதியில் கல்கிஸ்ஸ மாவட்ட நீதிமன்றத்தினால் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்திற்கு இந்த ஆதனத்தை ரூபா மூன்று

மில்லியன் தொகைக்கு விற்பனை செய்வதற்காக அங்கீகாரம் வழங்கியிருந்தது. எனினும் திணைக்களத்தினால் நீதிமன்ற அங்கீகாரம் கிடைப்பதற்கு முன்னர் 2010 19 திகதி அளவில் இந்த ஆதனத்திற்காக அதில் வதிபவரினால் ரூபா ஒரு மில்லியன் பெற்றிருந்ததுடன் அது கருத்து முரண்பாட்டுத் தன்மையுள்ள விடயம் ஒன்றென அவதானிக்கப்பட்டது.

## 2.4 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்

திணைக்களத்துடன் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை அடங்கியிருந்த கணக்காய்வு பந்திகளின் மூலம் சுட்டிக்காட்டி குறைபாடுகள் தொடர்பான திணைக்களத்தினால் சரிசெய்திருக்காத பந்திகளுடன் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2016 | 3.6.1(அ) | **டீ.வீ.பீ. விஜேஸிங்க தஹம்ஸெவன நம்பிக்கை பொறுப்பு நிதியம்**<br><br>கல்கிஸ்ஸவில் வதியும் திரு.டீ.ஜீ.டப்ளியூ. விஜேசிங்க அவர்களினால் பொது நம்பிக்கை பொறுப்பாளரை பொறுப்பாளராக பெயர் குறிப்பிட்டு ரூபா 25,000 இற்கான ஆரம்பத் தொகையொன்று மற்றும் பானந்துறை பிரதேசத்தில் அமைந்துள்ள 37.5 பர்சஸ் காணி ஒன்று உரித்தாக்கப்பட்டு 2013 ஜனவரி 31 ஆம் திகதி ''டீ.வீ.பீ. விஜேசிங்க தஹம் ஸெவன'' என்ற பேரில் நம்பிக்கை பொறுப்பு நிதியம் நிறுவப்பட்டிருந்தது. இதன் குறிக்கோள் என பௌத்த சாசனத்தில் பெண் துறவிகளின் நிலைப்புத் தன்மை தர்ம நிலையமொன்று நிறுவுதல் மற்றும் நடாத்துதல் குறிப்பிடப்பட்டிருந்தது.<br><br>இந்த காணி பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்திற்கு சட்டரீதியாக உரித்தாக்கு வதற்கு முன்னர் அந்த சில்மாதா பிக்கு மடாலயனம் ஒன்று நிர்மாணிப்பதற்காக நீதிமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. இந்த நிர்மாண வேலைக்காக மூலதனத்தில் இருந்து கிடைக்கும் வட்டித் தொகை போதியளவானதாக காணப்படுகின்றதா என திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. |

**3.6.1(ஆ)** **செல்வி சாந்தனி ஹேமலதா பெரேராவின் ஆதனங்களை முகாமைத்துவம் செய்தல்**

---

கொழும்பு மாவட்ட நீதிமன்றின் 06/2005/எல்ஜீ ஆம் இலக்க வழக்கின் தீர்ப்பின் மீது 2006 அக்தோபர் 04 திகதி செல்வி சாந்தனி ஹேமலதா பெரேரா அவர்களின் நோய் நிலைமை குணமடையும் வரை அவளின் ஆதனங்களின் பாதுகாப்பாளராகவும் தனிப்பட்ட பாதுகாப்பாளராகவும் பொது நம்பிக்கை பொறுப்பாளர் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் அவளின் பராமரிப்புக்காக நீதிமன்றத்தினால் குறிப்பிடப்படும் தொகை செலவிடுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் மூலம் நியமனம் செய்யும் சந்தரப்பங்களில் மந்த மனநிலை உடையவர்களின் முகாமையாளர் ஒருவராக பொது நம்பிக்கை பொறுப்பாளர் ஒருவர் செயற்பட வேண்டும். எனினும் அவ்வாறான ஆள் ஒருவரின் பாதுகாப்பாளராக செயற்படுவதற்கு குறிப்பிட்டு கட்டளை சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

**2016** **3.6.2(அ)** **யூ.டீ.பீ.த சில்வா மரணச் சொத்து**

---

2010 ஏப்ரல் 01 திகதி மரணமடைந்த யூ.டீ.பீ. த சில்வா அவர்களின் 2001 ஜுன் 29 இன் 10821 ஆம் இலக்க மரண சாசனத்தின் மூலம் அவரின் மரணச் சொத்துக்களுக்காக பொறுப்பாளராக பொது நம்பிக்கை பொறுப்பாளர் பெயரிடப்பட்டிருந்தார்.

மரணச் சொத்தின் நலன்பெறுவோர்களுக்கு வீடு ஒன்று நிர்மாணித்து கொடுக்கும் படி மரண சாசனத்தில் குறிப்பிட்டிருந்த போதிலும் வீடு கொள்வனவு செய்திருக்கவில்லை. இதற்காக திணைக்களத்தினால் 07 சந்தர்ப்பங்களில் மரணச் சொத்தின் மூலதனத்தில் இருந்து பிரயாணச் செலவு மற்றும் சட்டச் செலவுகளாக கூட்டுத்தொகை ரூபா 247,274 தொகை செலவிடப்பட்டிருந்தது.

வங்கியில் உள்ள பணத்தின் பெறுமதி ரூபா 41,079,003 தொகை எனவும் நிலையான வைப்புக்களில் உள்ள பெறுமதி ரூபா 110,513,662 தொகை எனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கோவையின் பிரகாரம் வங்கியில் உள்ள பணத்தின் பெறுமதி ரூபா 50,179,827 தொகையும் வைப்புக்களின் பெறுமதி ரூபா 58,000,000 தொகையாகக் காணப்பட்டது.

மரணச் சொத்தினால் சட்ட அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும் மரணச் சொத்தில் இருந்து ரூபா 2,038,430 தொகை சட்ட செலவுகளுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

மரணச் சொத்துதாரரின் குறிக்கோள்களுக்கு புறம்பாக ரூபா 484,946 தொகை தர்மப் படி செலுத்தப்பட்டிருந்தது.

**2016** **3.7(அ)** **கம்பளை நகர அபிவிருத்தி மற்றும் குப்பை அகற்றுதல் விடயத்திற்காக சீன அரசாங்கத்தால் கிடைத்த பணம்**

---

கம்பளை நகர அபிவிருத்தி மற்றும் குப்பை முகாமைத்துவத்திற்காக சீனா லின்ஸேன்ங் (Lingsang) நகர சபையின் நகரமுதல்வருடன் கம்பளை நகர சபையின் முன்னால் நகரமுதல்வர் 2011 ஜுலை 07 திகதி உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2012 அக்தேபார் 19 திகதி 159,604.18 அமெரிக்க டொலர்கள் அதாவது ரூபா 20,426,675 தொகை பொது நம்பிக்கை பொறுப்பாளரின் உத்தியோகபூர்வ வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டிருந்தது. அந்த பணத்தில் இருந்து பொது நம்பிக்கை பொறுப்பாளரினால் முறைசாராத விதமாக பல்வேறு கருமங்களுக்காக ரூபா 20,814,322 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.7(ஆ)** **திரு. சிசில் அர்னஸ்ட் வனிகசூரிய அவர்களின் மரணச் சொத்து தொடர்பான கணக்காய்வு**

1503 ஆம் இலக்க மரண சாசனத்தின் மூலம் அவரது மரணச் சொத்துக்கள் சொந்தமான அனைத்து ஆதனங்களையும் விற்பனை செய்து கிடைக்கும் பணம் ‘‘சிசில் வனிகசூரிய’’ நம்பிக்கை பொறுப்பு என்ற பேரில் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஒன்று நடத்தப்பட வேண்டுமென குறிப்பிட்டு 1999 நவம்பர் 28 ஆம் திகதி மரணமடைந்த திரு. சிசில் அர்னஸ் வனிகசூரிய அவர்களின் மரணச் சொத்து பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ரூபா 79 மில்லியன் தொகைக்கு மற்றும் ரூபா 9,043,935 தொகைக்கு விற்பனை செய்யப்பட்ட இரண்டு காணிகளின் மூலம் கிடைத்த பணத்தை சிசில் வணிகசூரிய மரணச் சொத்து கணக்கிற்கு கணக்கீடு செய்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கடவத்தை ஊரலிங்கனத்த என்ற காணியில் விற்பனை செய்யப்படாமல் மீதியாக இருந்த 01 ஏக்கர் 4 ரூட் 38 பர்சஸ் காணி அளவு, 04 இடங்களில் அமைந்திருந்த 03 ஏக்கர் 03 ரூட் 8 பர்சஸ் ஆதனங்களும் மேலும் 2 இடங்களில் காணப்பட்ட அளவினை உறுதிப்படுத்தியிருக்காத ஆதனங்களும், கொலன்னாவ நகர சபை எல்லையில் சேதவத்தையில் அமைந்துள்ள காணிகள் தொடர்பாகவும், புரோபேட் உரிமைப் பத்திரம் கிடைத்து 11 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்த ஆதனங்களை விற்பனை செய்து பணத்தை சிசில் வனிகசூரிய நம்பிக்கை பொறுப்பிற்கு செலவு வைப்பதற்காக திணைக்களத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2007 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த சொத்துக்கள் ரூபா 98,182,155 தொகை என குறிப்பிட்டிருந்த போதிலும் ஆதன அட்டவணையின் பிரகாரம் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 111,246,658 தொகை என குறிப்பிடப்பட்டிருந்தது. ரூபா 13,064,503 இற்கான இணக்கஞ் செய்யப்படாத வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

3.7(ஈ) **திருமதி. புலோரன்ஸ் ஈனிட் விதம் அவர்களின் மரணச் சொத்து**

---

1968 ஆகஸ்ட் 11 திகதி திருமதி. சிங்கப்பூரில் மரணமடைந்த பிலோரன்ஸ் ஈனிட் விதம் அவர்களின் இலங்கையில் 3 இடங்களில் அமைந்துள்ள மொத்தம் 3 ரூட் 35.8 பர்சஸ் காணி மற்றும் அந்தக் காணிகளில் அமைந்துள்ள 3 வீட்டு கட்டிடங்கள் விற்பனை செய்து பெறும் பணமும் தனியார் வங்கி ஒன்றில் காணப்பட்ட ரூபா 54,476 இற்கான பணமும் உரிமையாளர்களுக்கு/ பலன்பெறுவோருக்கு வழங்குவதற் காக அட்டோனி தத்துவகாரர் என இலங்கை பொது நம்பிக்கை பொறுபாளர் 1975 ஆண்டின் போது பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த ஆதனங்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்திருந்த ரூபா 69,066,000 இல் இருந்து ரூபா 25,615,209 தொகை உரிமையாளர்கள் மற்றும் நலன்பெறுவோருக்கு 20 பேருக்கு வழங்கப்பட்டிருந்தது. மீதியான ரூபா 43,450,791 தொகையான பணத்தில் 2016 ஜனவரி 31 திகதி வரை 5 வருடங்கள் கடந்திருந்த போதிலும் ஏனைய உரிமையாளர்களுக்கு வழங்கியிருக்க வில்லை.

கொழும்பு 5 க்ளாஸன் இடன், இல் அமைந்துள்ள 01 ரூட் 5.94 பர்சஸ் சதுர அளவைக் கொண்ட ஆதனங்கள் விற்பனை செய்யும் அலுவல்கள் 2016 திசெம்பர் 31 திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத் திகதியில் உள்ளவாறு இந்த ஆதனங்களை விற்பனை செய்த 40 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்தது.

2016 3.8(ஆ) **நாரஹேன்பிட ஸ்ரீ அபயாராம விஹாரைக்கு நட்ட ஈடு வழங்குதல்**

---

மேற்கூறிய விஹாரையின் காணி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தாக்கியதாக ரூபா 33.36 மில்லியன் நட்டஈடு ஒன்று 2007 மற்றும் 2008 ஆண்டுகளின் போது பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நட்டஈட்டுத் தொகையில் ரூபா 15 மில்லியன் தொகை விகாராதிபதி அல்லாத வேறு பிக்கு ஒருவரின் கோரிக்கையின் படி 2017 திசெம்பர் 06 திகதி செலுத்தப்பட்டிருந்தது. மேற்கூறிய நட்டஈட்டுத் தொகையை விடுவிப்பதற்காக விஹாரையின் அபிவிருத்தி அலுவலகங்களுக்காக செலவு மதிப்பீடு, பொறியியல் மதிப்பீடு பொறிறியல் வரைபு ஆகியன ஆவணங்கள் பௌத்த அலுவல்கள் ஆணையாளருக்கு சமர்ப்பித்திருக்க வில்லை.

நட்டஈட்டுத் தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்ததன் மூலம் 2015 பெப்ரவரி 09 திகதி அளவில் வட்டியாக ரூபா 24,88 மில்லியன் கிடைத்திருந்த போதிலும் ரூபா 34.11 மில்லியன் விஹாரையில் வசிக்கும் பிக்குவுக்கு விடுவிக்கப்பட்டிருந்தமையால் சட்டரீதியற்ற ரூபா 9.23 மில்லியனுக்கான கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.5 முகாமைத்துவப் பலவீனங்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) டீ.ஜே.டீ.ஜே. அபேஸேகர மரணச் சொத்து**

கொழும்பு 7, பான்ஸ் இடத்தில் 93 ஆம் இலக்க வீட்டில் வசித்துவந்த 1965 ஆகஸ்ட் 10 திகதி இறந்த திருமதி ஜொஹானா டயஸ் ஜயவீர அபேஸேகர அவர்களினால் 1965 ஆகஸ்ட் 06 ஆம் திகதி எழுதப்பட்ட 92 ஆம் இலக்க மரண சாசனத்தின் பிரகாரம் இலங்கையில் பொது நம்பிக்கை பொறுப்பாளர் பின் உரிமையாளர் என நியமனம் செய்யப்பட்டுளார். கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் 22469 ஆம் இலக்க வழக்கின் மூலம் 1968 மார்ச் 31 திகதி பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு புரோபேட் அனுமதிப்பத்திரம் கிடைத்திருந்தது.
இந்த மரணச் சொத்து தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பட்டபொலவில் அமைந்துள்ள வீதவரி இலக்கங்கள் 23 மற்றும் 25 கொண்ட 2 கடைகள் மற்றும் எல்பிட்டிய குருந்துகஹ ஹதப்ம பட்டபொல பாதையில் 33/1 ஆம் இலக்க காணியின் பகுதி

(ii) இந்த கடைகளை கொள்வனவு செய்யும் படி வாடகையாளர்களை அறிவூட்டிய போதிலும் இதழ்களை பதில் கிடைத்திருக்கவில்லை. 23 ஆம் இலக்க கடைக்காக 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகைத் தொகை ரூபா 154,880 தொகை ஆகும். எல்பிட்டிய குருந்துகஹ ஹதப்ம பட்டபொல பாதையில் 33/1 இலக்க 23.125 பர்சஸ் காணியில் பகுதியை ரூபா 2.30 மில்லியன் தொகைக்கும் பெறுமதி மதிப்பீட்டுத் தொகைக்கு கொள்வனவு செய்யுமாறு அறிவிருத்திருந்த போதிலும் 2018 ஏப்ரல் 25 திகதி வரை கொள்வனவு செய்திருக்கவில்லை. 2015 ஜூன் 30 திகதிக்கு நிலுவை வாடகைத் தொகை ரூபா 143,400 தொகையாகும். அத் திகதி முதல் கணக்காய்வு திகதி வரை 2 வருடங்கள் கடந்திருந்த போதிலும் கூட்டுத்தொகை ரூபா 298,280 தொகையான அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்காக திணைக்களத்திற்கு முடியாதுள்ளது. அதேபோல் முறையான வாடகை ஒப்பந்தமும் காணப்படவில்லை.

**(iii) 314 ஆம் இலக்க நில வரைபில் ஜீ எழுத்து கொண்ட காணித் துண்டு**

பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி ரூபா 710,000 தொகைக்காக 11.86 பர்சஸ் இந்தக் காணி செய்தித்தாள் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு கூடிய விண்ணப்பதாரர் ஆகிய 2004 ஜனவரி முதல் 2010 மே வரை 05 வருடங்கள் திணைக்களத்தில் கடமையாற்றிய பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 595,372 தொகைக்கு 2012 மார்ச் 29 திகதி அளவில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அரசாங்க பெறுமதி மதிப்பீட்டு பெறுமதியை விட குறைந்த விலைக்கு ஆதனத்தை

விற்பனை செய்திருந்தமையால் மரண சொத்திற்கு ரூபா 114,628 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

**(iv) நுகேகொட கந்த அத்தர கட்டிட அல்லது இஹல கந்த காணி**

இந்தக் காணிக்காக காணி பிரித்தல் வழக்கில் இறுதித் தீர்ப்பின் பிரகாரம் 2013 ஆகஸ்ட் 26 திகதி 01 ரூட் 26.6 பர்சஸ் தொகை பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு உரித்தாக்கியிருந்தது. கணக்காய்வுத் திகதி வரை மரணச் சொத்துதாரரின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக இந்தக் காணியை அபிவிருத்தி செய்வதற்கு அல்லது பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையை பெற்று விற்பனை செய்வதற்கு அல்லது வாடகைக்கு கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏதும் திணைக்களத்தினால் எடுத்திருக்கவில்லை.

**(ஆ) ஆர்.எல்.எச். சந்திரசேகர மரணச்சொத்து**

அனுராதபுர நகரத்தில் குருநாகல் பாதையில் வசித்துவந்த ஆர்.எல்.எச். சந்திரசேகர என்பவரின் மரணச் சொத்துக்கள் தொடர்பாக வழக்கு இலக்க T01/99 இன் கீழ் அந்த மரண சொத்துக்கள் ரூபா 1,058,867 தொகை பெறுமதிக்கு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு 1999 ஜனவரி 14 திகதி மரணசாசனம் மற்றும் மதிப்பீட்டை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எதரிப்பு மனு ஒன்றின் காரணமாக அனுராபுர மாவட்டம் நீதிமன்ற நீதிபதியினால் 2003 ஜூன் 04 திகதி வரையறுக்கப்பட்ட புரோபேட் அனுமதிப்பத்திரமொன்று பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்த்து. இந்த மரணச் சொத்துக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த மரணச்சொத்துக்குரிய தரை மற்றும் வயல் காணிகள் எவ்வளவு என உறுதிப்படுத்தும் நில அளவை வரைபுகள் அளவை பதிவு ஏதும் கோவையிடப்பட்டிருக்கவில்லை. திரு. ஆர்.எல்.எச். சந்திரசேகர அவர்கள் மரணமடைந்து 19 ஆண்டுகள் கடந்துள்ள மற்றும் பொது நம்பிக்கை பொறுப்பாளரால் திணைக்களத்திற்கு வரையறுக்கப்பட்ட புரோபேட் அனுமதிப்பத்திரம் கிடைத்து 14 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரை இந்த மரணச் சொத்திற்கான காணியை அளவை செய்து எல்லைகளை பாதுகாப்பு வேலி ஒன்று நிர்மாணித்து தீர்த்திருக்கவில்லை.

(ii) மரணச் சொத்துதாரர் உயிருடன் இருக்கும் போது அவரது காணிகளுக்காக பங்கு விளைவுக்காரர் ஒருவர் ஆக நியமிக்கப்பட்டிருந்த நபரே ஒரு ஏக்கர் வயல் நிலத்திற்கு 12 நெல் புசல்களுக்காக சான்றுபடுத்தி விலைக்கு சமமான தொகையும் தென்னை காணிக்காக ஒரு ஆண்டிற்கு ரூபா 2,500 வீதமும் மரணச் சொத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்காக இணங்கியிருந்தவாறு 2010 ஜூலை 04 திகதி முதல் ஆதனங்களுக்கான வாடகையாளர் ஒருவராக பொது நம்பிக்கை பொறுப்பாளரை தற்காலிக நியமனம் செய்திருந்த போதிலும், முறையான வாடகை ஒப்பந்தம் ஒன்றிற்கு அணுகியிருக்கவில்லை.

(iii) தொடர்ச்சியாக விளைச்சல் பழுதடைந்தது எனக் குறிப்பிட்டு விளைவிக்கப்பட்ட ஏக்கர்களின் எண்ணிக்கை குறைத்துக் காட்டி பங்குசெலுத்தவதை குறைப்பதற்கு மேற்கூறிய பங்காண்மை விவசாயி செயற்பட்டிருந்தார். பரவணி கிடைக்கும் எண்ணிக்கை சரியானதா என்பது தொடர்பாக பொது நம்பிக்கையாளர் திணைக்களத்தினால் எச்சந்தர்ப்பத்திலும் மேற்பார்வை ஒன்று அல்லாத தொடர் செயல் நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(iv) 2016/17 பெரும் போகத்தின் போது பங்காண்மை விவசாயியின் கணிப்பின் பிரகாரம் செலுத்த வேண்டிய தொகை ரூபா 289,308 பரவணி ரூபா 200,000 தொகை மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 89,308 மீதி தொகை 2017 இறுதி வரை செலுத்தியிருக்கவில்லை.

(v) தென்னைக் காணியின் விதைக்கும் பரப்பை திணைக்களத்தினால் அறுதியாக உறுதிப்படுத்தியிருக்காத போதிலும் தற்போது தரை நிலத்திற்காக ரூபா 3,000 ஆக பங்கான்மை விவசாயி செலுத்துவதால் கோவையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. திணைக்களத்தில் விசாரணை உத்திகோத்தரின் அறிக்கையில் குறிப்பிட்ட மரணச் சொத்திற்குரிய தென்னை காணி சுமார் 10 ஏக்கர் விளைச்சல் தரையை கொண்டிருந்தது எனக் காட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தென்னை 10 ஏக்கர்களுக்கு வருடாந்தம் செலுத்தும் பிரவேணி தொகை ரூபா 3,000 எவ்வளவு தூரம் நியாயமானது என்பது தொடர்பாக திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(vi) இந்த மரணச் சொத்திற்கு உரிய, அனுராதபுர புதிய நகரில் ஹரிஸ்சந்திர மாவத்தையில் 48/388 இலக்க இடத்தில் அமைந்துள்ள வியாபார கட்டிடம் மற்றும் காணியை மரணச்சொத்துதாரரினால் வாடகைக்கு கொடுத்திருந்ததுடன் அவரினால் வாடகையாளர்களை அகற்றுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பின் படி மரண சொத்துதாரரின் இறப்பின் பின்னர் மரணச் சொத்துதாரருக்கு சார்பாக தீர்ப்பு கிடைத்திருந்தது. அந்த தீர்ப்பின் பிரகாரம் மேற்கூறிய ஆதனங்களை தீர்த்து கொள்வதற்கும் அவற்றை முறைப் பிரகாரம் வாடகைக்கு கொடுத்து உரிய வாடகையை பெறுவதற்கு செயற்படாமையால் அதில் இருந்து வருமானம் ஏதும் மரணச் சொத்துக்களின் பேரில் திணைக்களத்திற்கு கிடைப்பதில்லை என அவதானிக்கப்பட்டது.

(vii) இந்த மரணச் சொத்திற்கு உரிய அனுராதபுர பழைய நகரத்தின் குருநாகல் வீதியில் 238 ஆம் இலக்க மற்றும் 239 ஆம் இலக்க வர்த்தக கட்டிடங்கள் மற்றும் அவை அமைந்துள்ள காணி தொடர்பாக வாடகையாளருடன் முறையான உடன்படிக்கை மேற்கொண்டிருக்க வில்லை. வர்த்தக பெறுமதியுடைய இந்த ஆதனங்களில் இருந்து 2000 ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் வருமானம் ஏதும் கிடைத்திருக்காததுடன் இந்த ஆதனங்கள் தொடர்பாக பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தினால் தேடுதல் ஒன்றும் மேற்கொண்டிருக்கவில்லை.

(viii) மரண சொத்தின் சட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத போதிலும், 1999 முதல் கணக்காய்வுத் திகதி வரை சட்டத்தரணிகள் 07 பேருக்காக சட்டத்தரணி கட்டணத்தை மரணச் சொத்தினை வருமானத்தில் இருந்து ரூபா 1,944,852 தொகை செலவிடப்பட்டிருந்தது. சட்டத்தரணி கட்டணம் செலுத்தும் போது நீதிமன்றத்தில் சமூகமளித்தார் என்பதை உறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 5 சந்தர்ப்பங்களில் செலுத்தியிருந்த இனங்காணப்படாத பலவின கொடுப்பனவுகள் ரூபா 136,079 மற்றும் இனங்காணப்படாத ரூபா 20,000 இற்கான புன்னிய கொடுப்பனவுகள் அவதானிக்கப்பட்டது.

(ix) மரண சொத்துதாரர்கள் மரணமடைந்து 19 வருடங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட புரோபேட் அனுமதிப்பத்திரத் திணைக்களத்திற்கு கிடைத்து 14 வருடங்கள் மிகைத்திருந்த போதிலும் அந்த மரணச் சொத்து தொடர்பாக வரையறுக்கப்பட்ட புரோபேட் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள

மரணமடைந்த மரணசாசனதாரரின் கடன் மற்றும் இறுதி விருப்புக் கொடை வழங்குவதன் மூலமும் குறிப்பிட்ட மரண சாசனத்தில் வரையறுக்கப்பட்ட புரோபேட் அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் செயற்படுத்துவதற்கும் அந்த ஆதனங்களின் மற்றும் பணம் தொடர்பான உண்மையான மற்றும் பூரணமான இறுதிக் கணக்கு ஒன்று மற்றும் ஆதன அட்டவணை ஒன்று நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பொது நம்பிக்கை பொறப்பாளருக்கு முடியாமையினால் தமது மரணச் சொத்து பொது நம்பிக்கையாளர் திணைக்களத்திற்கு ஒப்படைத்து மரண சொத்துதாரர் எதிர்பார்த்த எதிர்பார்ப்புக்கள் மற்றும் குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) மனோஹரி சுனில்காந்தி மடுகல்ல ஆதனங்களின் முகாமைத்துவம்**

-----------------------------------------------------------------------------------------------------------

மனோஹரி சுனில்காந்தி மடுகல்ல என்ற நோய்வாய்ப்பட்டுள்ள ஆளின் ஆதனங்களின் பொறுப்பாளர் மற்றும் முகாமையாளராக பொது நம்பிக்கை பொறுப்பாளர் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். 1992 ஜனவரி 26 திகதிய 25718 ஆம் இலக்க வெகுமதி காணி உறுதி மற்றும் அட்டவணையின் பிரகாரம் 25 ஏக்கர்கள் 03 ரூட் விளைச்சல் தரையினை கொண்ட வயல் நிலம் மற்றும் தரை நிலம் குறிப்பிட்ட ஆதனங்களில் அடங்கியிருந்தன. ஆதனங்களின் முகாமைத்துவம் பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு ஒப்படைக்கப்பட சந்தர்ப்பத்தில் பங்காண்மை விவசாயிகளினால் அந்த வயலின் நிலத்திற்காக செலுத்த வேண்டிய உரிமையாளரின் பங்கு மல்சிரிபுர கமநல சேவை திணைக்களத்தில் வைப்புச் செய்யப்பட்டு வந்திருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆதனங்கள் பொது நம்பிக்கை பொறுப்பாளரின் முகாமைத்துவத்திற்கு கீழ் வருவதற்கு முன் வயல் காணிகள் தொடர்பாக பங்காண்மை விவசாயிகளினால் மல்சிரிபுர கமநலசேவை நிலையத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்ட பணம் அந்த கமநல சேவை நிலையங்களினால் நீதிமன்றத்தில் குறிப்பிட்ட வழக்கின் செலவுக்கு வைப்பு செய்யப்பட்டிருந்தது என கோவையின் பிரகாரம் உறுதிபடுத்தப்பட்டிருந்த போதிலும் அப்பணம் குறிப்பிட்ட ஆதனங்களுக்கு முகாமைத்துவத்தின் பேரில் பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு பெற்றுக்கொள்வதற்காக பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களம் கணக்காய்வுத் திகதி வரையும் முடியாதிருந்தது. இது தொடர்பாக வழக்கு விடயங்களுக்காக குறிப்பிட்ட சட்டத்தரணிக்கு மூன்று சந்தர்ப்பங்களில் ரூபா 20,500 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) 2014 ஆண்டிற்காக ரூபா 80,648 இற்கான தொகையொன்றும் 2015 ஆண்டிற்கான ரூபா 142,700 இற்கான தொகையொன்றுமாக கூட்டுத்தொகை ரூபா 223,348 இற்கான தொகையொன்று பிரவேணியாக கிடைத்திருந்தது என மல்சிரிபுர கமநலசேவை நிலயத்தினால் பொது நம்பிக்கை பொறுப்பாளரிடம் உறுதிப்படுத்தியிருந்தார். அவற்றில் ரூபா 134,419 தொகை மாத்திரம் பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு 2015 அக்தோபர் 09 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரை நிலுவைத் தொகை ஆகிய ரூபா 82,228 தொகையினை மனோஹரி சுனில்காந்தி ஆதன முகாமைத்துவ கணக்கிற்கு பெற்றுக்கொள்வதற்கு பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்கு முடியாதிருந்தது. மேலும், 2016 சிறுபோகம் 2016/17 பெரும்போகங்களுக்காக பணம் ஏதும் கணக்காய்வுத் திகதி வரை திணைக்களத்திற்கு கிடைத்திருக்கவில்லை. மரண சொத்திற்கு உரித்தான 25 ஏக்கர் 03 ரூட் அளவு மொத்த காணியின் உண்மையான வருமானம் தொடர்பாக மற்றும் வயல் நிலங்களின் உண்மையான வருமானத்தை மதிப்பீடு செய்து ஆதனங்களில் இருந்து உரிய முறையில் பங்காண்மை விவசாயி

வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக திணைக்களத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) குறிப்பிட்ட பெண் மரணமடைந்து கணக்காய்வுத் திகதிக்கு ஒரு வருடமும் 8 மாதங்கள் கழிந்துள்ள போதிலும் அவளின் இறப்பினை மதிப்பிற்குரிய நீதிமன்றத்திற்கு உறுதிப்படுத்தி முகாமைத்துவத்திற்குரிய காணியை விடுவிக்கப்பட வேண்டிய முறை தொடர்பாக நீதிமன்றத்தின் கட்டளை ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.6 செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 34.831 | 34.269 | 0.562 | 2 |
| | மூலதன | 3.640 | 1.746 | 1.894 | 52 |
| | **மொத்தம்** | **38.471** | **36.015** | **2.456** | **6** |
| 2014 | மீண்டுவரும் | 36.488 | 36.405 | 0.083 | 0.2 |
| | மூலதன | 1.917 | 1.723 | 0.194 | 10.1 |
| | **மொத்தம்** | **38.405** | **38.127** | **0.278** | **0.7** |
| 2015 | மீண்டுவரும் | 45.450 | 42.117 | 3.333 | 7.2 |
| | மூலதன | 2.905 | 2.727 | 0.178 | 6.8 |
| | **மொத்தம்** | **48.355** | **44.844** | **3.511** | **7.2** |
| 2016 | மீண்டுவரும் | 45.015 | 44.469 | 0.546 | 1.2 |
| | மூலதன | 2.345 | 2.312 | 0.033 | 1.4 |
| | **மொத்தம்** | **47.360** | **46.78** | **0.579** | **1.2** |
| 2017 | மீண்டுவரும் | 49.475 | 49.031 | 0.443 | 0.8 |
| | மூலதன | 3.177 | 3.171 | 0.006 | 0.2 |
| | **மொத்தம்** | **52.652** | **52.202** | **0.450** | **0.8** |

**2.7 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் கீழ்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடு முறைப்படி மற்றும் நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதி 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | திணைக்களத்திற்கு மரண சொத்தின் கீழ் கிடைத்துள்ள 12 தோட்டங்கள், வீடுகள், ஆதனங்கள், வாகனங்கள் அவை அடங்கக் கூடிய விதமாக நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரை ஆக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | முதலீட்டு பதிவேடு | 2006 திசெம்பர் 22 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் PF/423 இல் 4.2(ஊ) பந்தி | கணக்கு பிரிவினால் பொது முதலீட்டு பதிவேடு பேணியிருக்கவில்லை. |
| (இ) | நம்பிக்கைப் பொறுப்பு மரண சொத்துப் பதிவேடு | 2006 திசெம்பர் 22 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை PF/423 இல் பந்தி 4.2(ஊ) | செயற்படாத நம்பிக்கை பொறுப்புக்கள் செயற்படு நம்பிக்கை பொறுப்புக்கள் மூடப்பட்ட நம்பிக்கை பொறுப்புக்கள் என்பவற்றை இனங்காணக் கூடிய விதமாக நம்பிக்கை பொறுப்பு பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | மின் உபகரணங்கள் மீதான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடுகள் ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

**2.8 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தின் கீழ் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டிருந்தது. இனங்காணப்பட்ட 18 கணக்காய்வுப் பரப்புக்களின் கீழ் உள்ளகக் கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பரப்புக்களில் 03 இற்கான செய்பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**2.9 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள்**

2016 ஜனவரி 28 திகதிய DMA/2009/1(i) இலக்கங் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டிற்கு ஒன்று என்ற முறையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது 02 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

## 2.10 மனிதவள முகாமைத்துவம்

**இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

மேற்கூறிய 2.1 பந்தியில் குறிப்பிட்டுள்ள செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 31,977 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 00 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 59 | 47 | 12 |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 12 | 05 |
| | மொத்தம் | 84 | 65 | 19 |

(அ) மீளாய்வாண்டு இறுதியளவில் உள்ளவாறு 19 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது தேவைக்கு ஏற்ற விதமாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2012 ஆண்டின் போது திணைக்கள பதவியணியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களில் 51 உத்தியோகத்தர்கள் எதுவித பயிற்சியும் பெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.